Alters- und Versicherungsamt

Stadt Bern
Direktion für Bildung
Soziales und Sport

# பற்றாக்குறை நிவர்த்திப் பணத்தினூடாக வைத்தியச் செலவுகளைத் திருப்பிப் பெறல்

## 1. பெறத்தகுதி

பற்றாக் குறை நிவர்த்திப் பணத்தைப் பெறுவோரின் வைத்தியக் காப்புறுதியால் பொறுப்பெடுக்கப்படாத வைத்தியச் செலவுகளை பற்றாக்குறை நிவர்த்திநிதியிலிருந்து திருப்பப் பெறலாம். அதிகரித்த வருமானத்தால் பற்றாக் குறை நிவர்த்திப் பணத்தைப் பெறாதவர் காப்புறுதியால் பொறுப்பெடுக்கப்படாத வைத்தியச் செலவுகளை பற்றாக்-குறை நிவர்த்திநிதியிலிருந்து பெற விண்ணப்பித்தால் மேலதிகச் செலவு தரப்படும்.

சுவிசினுள் ஏற்பட்ட செலவுகள் மட்டும் ஏற்கப்படும். வெளிநாட்டில் விடுமுறையில் அவசரமாகச் செயற்படுத்த வேண்டிய வைத்தியச் செலவுகள் புறநடையாக மட்டுமே கவனிக்கப்படும்.

## 2. விண்ணப்பித்தல் கால எல்லை

வைத்தியக் காப்புறுதியால் பொறுப்பெடுக்கப்படாத வைத்தியச் செலவுகளை பற்றாக்-குறை நிவர்த்திநிதியிலிருந்து திருப்பப் பெற பேர்ண் நகர வயோதிபர்பண அலுவல-கத்தில் செலவு ஏற்பட்ட அல்லது வைத்தியக்காப்புறுதி கணிப்பிட்ட 15 மாதத்திற்கிடை-டயில் விண்ணப்பித்தல் வேண்டும்.

## 3. திரும்பப்பெற ஏற்ற நோய்- உடல்ஊனச் செலவுகள்

- கட்டாயக் காப்புறுதியால் தரப்படாத 10% செலவும் வருட வைப்புத் தொகையும் (Franchise) வருடத்திற்கு வளர்தோருக்கு 1000.- சிறார்களுக்கு 350.-
- கட்டாயத் தேவையான நிதிமிகைப்படாத பற்பராமரிப்பு
- வீட்டில் அல்லது விடுதியில் பராமரிப்பும் உதவியும்
- வீட்டுக்கடமை உதவி (ஒரே வீட்டில் வாழாத நபர்களால் அல்லது தாதி (Spitex) நிறுவனங்களால்)
- ஆறுதல் ஆரோக்கியத்திற்கான விடுதி மற்றும் வைத்தியசாலைச் செலவுகள்
- வைத்தியரால் உத்தரவிடப்பட்ட குளியல், நீச்சல் ஆரோக்கிய நிலைகள்
- வைத்தியரால் உத்தரவிடப்பட்ட விசேட உணவு (சக்கரை வியாதி தவிர்ந்த)
- அண்மை வைத்திய நிலையத்திற்கான போக்குவரத்து செலவு
- வாழ்க்கை உதவிப் பொருட்கள் ஒரு பகுதி வயோதிபர் பணநிலையில் பெறலாம் (சக்கரவண்டி, விசேட காலணி, முகஅழிவு பாதுகாப்பு முகமூடிகள், செயற்கைத் தலைமுடி, காதிற்கு ஒலிபெருக்கி, பேச்சுஉதவிக்கருவி, முகக்கண்ணாடி)

கிழே சில விளக்கங்கள்

### 3.1 பற்பராமரிப்பு

கட்டாயத் தேவையான, இலகுவான, நிதிமிகைப்படாத பராமரிப்பு மட்டுமே தரப்படும். இதற்கான உங்கள் வைத்தியரால் தரப்பட்ட முன்னேற்பாடான கணிப்பீடு மாநிலத்தின் வயோதிபர்பண நிலையினால் பரிசோதிக்கப்பட்ட பின்னே ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறான பற்பராமரிப்புத் தேவை 1500.- க்கு மேற்பட்டால் முன்னேற்பாடான வைத்தியக் கணிப்பீட்டுடன் பற்பராமரிப்பு பரிசோதனை நிலைக்கு விண்ணப்பியுங்கள். இதை விட பல்வேர் பராமரிப்பு, பற்பாதுகாப்பு உறை, பல்வேருக்கான மாற்றீடு, பல்லிலன் மேற்புற மற்றும் சுற்றுப்புறத் துவாரங்களை அடைத்தல், முரசு மற்றும் பல்வேர் பயன்ப-டுத்த முடியாவிட்டால் ஆரோக்கிய பற்களுக்கிடையில் பாலமமைத்தல், பல்வேருக்கு உறை போன்ற பராமரிப்புகளுக்கு முன்னேற்பாடாக விண்ணப்பியுங்கள். பற்பராமரிப்பை ஆரம்பிக்கையில் (முன்னேற்பாடான வைத்தியக் கணிப்பீட்டுடன் பற்பராமரிப்பு

பரிசோதனை நிலைக்கு விண்ணப்பியுங்கள். தொடர்ந்த செலவுகளுக்கான அறிவித்தல்-களை பல்வைத்தியர்களுக்கான அறிவிப்புகளிலும் வயோதிபர் காப்புறுதிப் பண நிலையின் இணையத்தளத்திலும் www.akbern.ch பெறுங்கள்.

### 3.2 குடும்பத்தினரால் பராமரிப்பும் உதவியும்

இயலாத குடும்ப அங்கத்தவருக்கு அதே குடும்ப அங்கத்தவர் ஒருவரால் உடல் மற்றும் வாய் பல் கழுவுதல், படுக்கையை விரித்தல், படுக்கையில் கிடப்பவரை நிலை மாற்றுதல், படுக்கையிலிருந்து இருத்துதல் போன்ற பராமரிப்பிற்கு ஒரு மணிக்கு 25.- படி வருடத்திற்கு 9‘600.-க்கு மேற்படாமல் தரப்படும். உதவும் குடும்ப அங்கத்தவர் பற்றாக்-குறை நிவாரணக் கணிப்பீட்டினால் பணம் பெறாவிட்டாலே இது தரப்படும்.

பற்றாக்குறை நிவாரணக் கணிப்பீட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உதவிக்கடமைகளான படுக்கையில் இடைக்கிடை கவனித்தல், வெளியில் உலாஅழைத்துச் செல்லல் போன்றன மணிக்கு 25.- படி கணிப்பிடப்படும். இது குறிப்பிட்டவர இவ்வுதவிக்காக தன் உழைப்பை இழந்த அளவின் அடிப்படையில் கவனிக்கப்படும். இவ்வகை வருமானத்திற்கு வயோதிபர் காப்புறுதிக்கான கட்டணம் மற்றும் வரி என்பனவும் கவனிக்கப்படும்.

இதற்கான கணிப்பீட்டிற்கான படிவங்களை வயோதிபர் காப்புறுதிப் பண நிலையின் இணையத்தளத்திலும் www.akbern.ch பெறுங்கள். இந்த உதவி குறிப்பிட்டவருக்குத் தேவை என்பதை வைத்தியர் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

### 3.3 வீட்டுக்கடமையில் உதவி

குடும்பத்தினர் அல்லது வேற்றவர் நாளாந்த வீட்டுக் கடமைகளாகிய சமையல், சுத்தமாக்கல், ஆடைஅணிகள் கழுவுதல் போன்றவற்றிற்கு வருடத்திற்கு 4’800.-க்குள் (மணிக்கு 25.- படி) செலவிற்கு பணம் பெறலாம். இதற்கும் இந்த உதவி கட்டாயம் குறிப்பிட்டவருக்குத் தேவை என்பதை வைத்தியர் அத்தாட்சிப்படுத்த வேண்டும். இக் கடமையைச் செய்து பணம் பெறுபவர் ஒரே வீட்டில் வசிப்பவராக இருத்தல் முடியாது.

### 3.4 போக்குவரவு

அண்மையில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று வந்த செலவுகளை அதற்குரிய படிவத்தில் எழுதி விண்ணப்பிக்கவும். போக்குவரத்துச் செலவுகளான Taxi/ Betax/ தனியார் வாகனம் போன்றன கட்டாயம் குறிப்பிட்டவருக்குத் தேவை என்பதையும் பொதுப் போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்த முடியாதென்பதையும் வைத்தியர் அத்தாட்சிப்படுத்த வேண்டும். இதற்கான கணிப்பீட்டிற்கான படிவங்களை வயோதிபர் காப்புறுதிப் பண நிலையில் பெறுங்கள்

## 4. திரும்பப் பெற ஏற்ற அதிகதொகையின் எல்லை

வருடாந்தம் தரப்படும் பற்றாக்குறை நிவர்த்திப் பணத்துடன் மேலதிகமாப் திரும்பப் பெற ஏற்ற வைத்திய உடல் ஊனச் செலவுகள் தொகை கீழ்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது:

- தனித்த நபர் ஒருவருக்கு 25’000.- பிராங்
- தம்பதியருக்கு 50’000.- பிராங்
- விடுதியில் வசிப்போருக்கு 6’000.- பிராங்